05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# தமிழ்த்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN PENGUASAAN *URUVAGA ANI* (METAFORA) DAN *PINVARUNILAI ANI* (REPITASI) DALAM PUISI KESUSASTERAAN BAHASA TAMIL TINGKATAN LIMA MELALUI LAGU FILEM BAHASA TAMIL

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**பிரேமா த/பெ சௌந்தராசு**
**PEREMA A/P SOUNDARAJ**

**சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2023**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**தமிழ்த்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல்**

# MENINGKATKAN KEMAHIRAN PENGUASAAN *URUVAGA ANI* (METAFORA) DAN *PINVARUNILAI ANI* (REPITASI) DALAM PUISI KESUSASTERAAN BAHASA TAMIL TINGKATAN LIMA MELALUI LAGU FILEM BAHASA TAMIL

**பிரேமா த/பெ சௌந்தராசு**

**PEREMA A/P SOUNDARAJ**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இந்த ஆய்வு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்பிக்கப்பட்டது.**

**LATIHAN ILMIAH INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN**

**PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODEN**
**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**
**2023**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

**இந்த உறுதிமொழி ……………..( நாள்)…………(மாதம்) 2023 அன்று வழங்கப்பட்டது.**
**Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas,**

**I. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar)**

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட **'தமிழ்த்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல்'** எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழித் தொடர்பியல் புலத்தின் மாணவியாகிய நான், **பிரேமா த/பெ சௌந்தராசு (D20191099920)** உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு, அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதுடன், துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Saya, **Perema A/P Soundaraj (D20191089920)** Fakulti Bahasa dan Komunikasi dengan ini Mengaku Bahawa Projek Penyelidikan yang **Bertajuk 'Meningkatkan Kemahiran Penguasaan *Uruvaga Ani* (Metafora) dan *Pinvarunilai Ani* (Repitasi) dalam Puisi Kesusasteraan Bahasa Tamil Tingkatan Lima Melalui Lagu Filem Bahasa Tamil'** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

________________________

மாணவர் கையொப்பம் / Tanda tangan pelajar

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia):**

**‘தமிழ்த்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல்’** என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு, **பிரேமா த/பெ சௌந்தராசு (D20191099920)** என்ற மாணவரின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான் **முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ். எஸ்** உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழித் தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, **Dr Franklin Thambi Jose Selistus Darling** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **‘Meningkatkan Kemahiran Penguasaan *Uruvaga Ani* (Metafora) dan *Pinvarunilai Ani* (Repitasi) dalam Puisi Kesusasteraan Bahasa Tamil Tingkatan Lima Melalui Lagu Filem Bahasa Tamil’** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Fakulti Bahasa dan Komunikasi bagi memenuhi sebahagian syarat untuk memperoleh Ijazah Sarjana Muda Pendidikan (Bahasa Tamil) Dengan Kepujian.

__________________ __________________________________

நாள் / Tarikh நெறியாளர் கையொப்பம்/ Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**நன்றியுரை**

இவ்வாய்வினைத் தங்குத் தடையின்றிச் சிறப்புடன் மேற்கொள்ள எனக்கு மனவலிமையை வழங்கிய இறைவனுக்கு நான் நன்றி கூறி வணங்குகிறேன். இவ்வாய்வினைச் மேற்கொள்ள அனுமதி வழங்கிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பிரிவுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தொடர்ந்து, இந்த ஆய்வைத் தொடங்கிய நாள் முதல் நேரத்தை ஒதுக்கி ஆய்வில் செய்த குறைகளைச் சுட்டிக்காட்டி, வழிக்காட்டி எம்மையும் இவ்வாய்வையும் சீர் செய்து வந்த முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ். எஸ் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் துவண்டு விழும் பொழுது என் மனத்திற்கு வலிமையை ஊட்டிய என் தாய் திருமதி அமிர்தவள்ளி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாய்வுக்குத் தரவுகளைத் திரட்ட உறுதுணையாக இருந்த கோலாலம்பூர் புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் அமைந்துள்ள இடைநிலைப்பள்ளி முதல்வர் அவர்களுக்கும் தமிழ்மொழி ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் இவ்வேளையில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக, இவ்வாய்வை நன்முறையில் செய்து முடிக்க உதவிகளைப் புரிந்த எல்லீருக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி,வணக்கம்.

பிரேமா த/பெ சௌந்தராசு

D2019108992


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச்சாரம்

இவ்வாய்வு 'தமிழ்த்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல்' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு ஐந்தாம் படிவ மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிதல், ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ் இலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனைத் தமிழ்த்திரைப்படப் பாடல்கள் மூலம் மேம்படுத்துதல் ஆகிய இரண்டு நோக்கங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர் இவ்வாய்வுக்குத் தண்டியலங்காரம் கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளார். ஆய்வாளர் இவ்வாய்வினையைக் கோலாலம்பூரில் புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் அமைந்திருக்கும் ஓர் இடைநிலைப்பள்ளியில் மேற்கொண்டார். இவ்வாய்வில் 10 தமிழ் இலக்கியப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் மாணவர்களும் 2 தமிழ் இலக்கியப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களும் உட்படுத்தப்பட்டனர். ஆய்வாளர் முன்னறித் தேர்வு, நேர்காணல் வினாத்தொகுதி, கருத்தறிவினாப் படிவம், தேர்வுத் தாள், மதிப்பீட்டுத் தாள், உற்றுநோக்கல் படிவம், பின்னறித் தேர்வு ஆகியவற்றின் வழி தரவுகளைச் சேகரித்தார். ஆய்வின் முடிவாக, அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம்குன்றி இருக்கும் முதன்மைக் காரணங்களாக அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்ளும் முறை மாணவர்களை ஈர்க்கும் வகையில் இல்லை, அணியிலக்கணம் வகைகளை வேறுபாடு காண்பது கடினமாக இருக்கின்றது, ஆகியவைக் கண்டறியப்பட்டன. அதோடு, உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனைத் திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி மாணவர்களிடையே இருந்த சிக்கல்களைக் களைவதற்கான முறையும் இவ்வாய்வை மேற்கொண்டதன் வழி ஆய்வாளரால் அறிய முடிந்தது. சுருங்கக் கூறின், இந்த ஆய்வினில் உட்படுத்தப்பட்ட அனைத்து ஆய்வு மாதிரிகளும் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் மாணவர்கள் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிந்து களைந்து, அவர்களின் திறனை ஆய்வாளர் மேம்படுத்தியுள்ளார் என்பதை இந்த ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டது, இறுதியாக, இந்த ஆய்வு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கல்வி அமைச்சுக்கும் பல நன்மைகளைத் தர வல்லதாக மிளிர்ந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**MENINGKATKAN KEMAHIRAN PENGUASAAN *URUVAGA ANI* (METAFORA) DAN *PINVARUNILAI ANI* (REPITASI) DALAM PUISI KESUSASTERAAN BAHASA TAMIL TINGKATAN LIMA MELALUI LAGU FILEM BAHASA TAMIL**

## ABSTRAK

Kajian ini dijalankan untuk mengetahui masalah dan penyelesaian dalam meningkatkan penguasaan retorik, Uruvaga Ani (Metafora) dan Pinvarunilai Ani (Repitasi) dalam puisi kesusasteraan Bahasa Tamil, Tingkatan 5. Pada era moden ini, para pelajar menghadapi banyak masalah dalam penguasaan retorik. Disebabkan ini, kebanyakkan pelajar tidak meminati untuk mengambil subjek kesusasteraan Bahasa Tamil. Kajian ini dijalankan dengan dua objektif iaitu mengenalpasti faktor pelajar tingkatan lima kurang minat dalam penguasaan retorik dan meningkatkan penguasaan *Uruvaga Ani* (Metafora) dan *Pinvarunilai Ani* (Repitasi) melalui lagu filem Bahasa Tamil dalam kalangan pelajar tingkatan lima. Pengkaji telah menggunakan teori '*Thandiyalangaram*' dalam kajian ini. Pengkaji telah menggunakan ujian Pra, borang Soal Selidik, Temu Bual, borang Penilaian, borang Pemerhatian, ujian Pasca untuk mengumpul data bagi kajian ini. Selain itu, kajian ini telah dijalankan di Kawasan Bukit Bintang, Brickfields, Kuala Lumpur. Pengkaji menggunakan kaedah gabungan iaitu kuantitatif dan kualitatif. Dua orang guru Bahasa Tamil dan 10 orang pelajar tingkatan lima telah melibatkan diri dalam kajian ini. Hasil kajian ini, didapati bahawa terdapat pelbagai masalah dalam kalangan pelajar untuk menguasai retorik. Antaranya, susah untuk membezakan jenis-jenis retorik dan cara pembelajaran retorik tidak menarik. Pengkaji turut dapat mengetahui cara mengatasi masalah ini dalam kalangan pelajar dengan menggunakan pendekatan lagu filem. Akhir sekali, kajian ini akan membawa banyak faedah kepada para pelajar, guru dan Kementerian Pendidikan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I |
| ஆய்வுச்சாரம் | II |
| ABSTRAK | III |
| இயல் 1 | 1 |
| அறிமுகம் | 1 |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 3-5 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 6 |
| 1.5 ஆய்வு வினா | 7 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 8-9 |
| 1.7 ஆய்வு எல்லை | 10-11 |
| 1.8 ஆய்வு சான்றாதரம் | 12-13 |
| 1.9 கலைச்சொல் விளக்கம் | 14-15 |
| 1.10 தொகுப்புரை | 16 |
| இயல் 2 | 17 |
| ஆய்வு மீள்நோக்கு | 18 |
| 2.1 முன்னுரை | 19-20 |
| 2.2 கோட்பாட்டுக் கட்டமைப்பின் விவாதம் | 21-22 |
| 2.3 தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகள் குறித்து விமர்சனம் | 23 – 44 |
| 2.3.1 கவிதை | |
| 2.3.2 உருவக அணி, பின்வருநிலை அணி | |
| 2.3.2 திரைப்படப் பாடல்கள் | |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | |
|---|---|
| 2.4 தொகுப்புரை | 45 |
| இயல் 3 | 46 |
| ஆய்வு நெறிமுறை | 46 |
| 3.1 முன்னுரை | 47 |
| 3.2 ஆய்வு வடிவமைப்பு | 48-49 |
| 3.3 ஆய்வுக் கட்டமைப்பு | 50-51 |
| 3.4 ஆய்வு அணுகுமுறை | 52-53 |
| 3.5 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர். | 54-56 |
| 3.6 ஆய்வுக் கருவி | 57- 80 |
| 3.6.1 தமிழிலக்கியத் தேர்வுத் தாள் (ஆவணம்) | |
| 3.6.2 கருத்தறிவினாப் படிவம் | |
| 3.6.3 நேர்க்காணல் | |
| 3.6.4 உற்றுநோக்கல் படிவம் | |
| 3.6.5 முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு, மதிப்பீட்டுத் தாள் | |
| 3.7 தரவு சேகரிப்பு முறை | 81 – 85 |
| 3.7.1 ஆய்வு அனுமதி | |
| 3.7.2 ஆய்வுக் கால வரையறை | |
| 3.8 தரவு பகுப்பாய்வு முறை | 86 |
| 3.9 ஆய்வுக் கோட்பாடு | 86-88 |
| 3.10 தொகுப்புரை | 89 |
| இயல் 4 | 90 |
| ஆய்வுக் கண்டுபிடிப்பு | 91 |
| 4.1 முன்னுரை | 92 |
| 4.2 ஆய்வு மாதிரி விபரங்கள் | 93 -95 |
| 4.3 முன்னறித் தேர்வு முடிவுகள் | 96-97 |
| 4.3 ஐந்தாம் படிவ மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிதல். | 98-113 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4 ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ் இலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி மற்றும் பின்வருநிலை அணி கற்றல் திறனைத் தமிழ்த்திரைப்படப் பாடல்கள் மூலம் மேம்படுத்துதல். 113-116

4.5 பின்னறித் தேர்வு முடிவுகள் 117-119

4.6 முன்னறித் தேர்வு – பின்னறித் தேர்வு ஒப்பீடு 120-123

4.7 தொகுப்புரை 123

இயல் 5 124

முடிவுரை 124

5.1 முன்னுரை 124

5.2 ஆய்வு முடிவு 125

5.3 ஆய்வுக் கருத்துரை 126-127

5.4 ஆய்வுத் துறைக்கான முக்கியத்துவம் 128

5.5 தொடராய்வுக்கான பரிந்துரைகள் 129

5.6 தொகுப்புரை 130

துணைநூற்பட்டியல் 131-133

பின்னிணைப்பு 1 134

பின்னிணைப்பு 2 135

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அட்டவணைப் பட்டியல்**


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| அட்டவணை 3.1 | கருத்தறிவினாப் படிவம் | 44 |
| அட்டவணை 3.2 | உற்றுநோக்கல் படிவம் | 45 |
| அட்டவணை 4.1 | மாணவர்களின் பாலின விபரம் | 48 |
| அட்டவணை 4.2 | ஆசிரியர்களின் விபரம் | 56 |
| அட்டவணை 4.3 | மாணவர்களின் அரையாண்டுத் தேர்வு அடைவுநிலை | 59 |
| அட்டவணை 4.4 | முன்னறித் தேர்வு முடிவுகள் | 62 |
| அட்டவணை 4.5 | கருத்தறிவினாப் படிவ முடிவுகள் | 64 |
| அட்டவணை 4.6 | நேர்காணல் வழி சேகரிக்கப்பட்ட தரவுகள் | 69 |
| அட்டவணை 4.7 | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் | 76 |
| அட்டவணை 4.8 | நடவடிக்கை வாரம் 1 | 79 |
| அட்டவணை 4.9 | முதல் வார நடவடிக்கையின் முடிவுகள் | 81 |
| அட்டவணை 4.10 | நடவடிக்கை வாரம் 2 | 83 |
| அட்டவணை 4.11 | இரண்டாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 85 |
| அட்டவணை 4.12 | நடவடிக்கை வாரம் 3 | 87 |
| அட்டவணை 4.13 | மூன்றாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 89 |
| அட்டவணை 4.14 | நடவடிக்கை வாரம் 4 | 91 |
| அட்டவணை 4.15 | நான்காம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 93 |
| அட்டவணை 4.16 | நடவடிக்கை வாரம் 5 | 95 |
| அட்டவணை 4.17 | ஐந்தாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 99 |
| அட்டவணை 4.18 | உற்றுநோக்கலின் முடிவுகள் | 102 |
| அட்டவணை 4.19 | பின்னறித் தேர்வு முடிவுகள் | 104 |
| அட்டவணை 4.20 | முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு ஒப்பீடு | 105 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## வரைபடப் பட்டியல்



| வரைபட எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| வரைபடம் 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 28 |
| வரைபடம் 3.2 | ஆய்வுக் கட்டமைப்பு | 29 |
| வரைபடம் 3.3 | ஆய்வுக் கோட்பாடு | 41 |



## குறிவரைவு பட்டியல்



| குறிவரைவு எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| குறிவரைவு 4.1 | அரையாண்டுத் தேர்வு முடிவுகள் | 60 |
| குறிவரைவு 4.2 | முன்னறித் தேர்வு முடிவுகள் | 63 |
| குறிவரைவு 4.3 | கருத்தறிவினாப் படிவ முடிவுகள் | 66 |
| குறிவரைவு 4.4 | முதல் வார நடவடிக்கையின் முடிவுகள் | 82 |
| குறிவரைவு 4.5 | இரண்டாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 86 |
| குறிவரைவு 4.6 | மூன்றாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 90 |
| குறிவரைவு 4.7 | நான்காம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 94 |
| குறிவரைவு 4.8 | ஐந்தாம் வார நடவடிக்கையின் முடிவுகள் | 98 |
| குறிவரைவு 4.9 | பின்னறித் தேர்வு முடிவுகள் | 103 |



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியம், தமிழ்மொழிப் பாடத்துக்கு வேர் போன்றது. தொன்மையான வரலாறுகளைக் கொண்டிருந்தாலும் தமிழ் இலக்கியம் அதனின் சிறப்பில் என்றும் புதுமைக்கும் புதுமையாக மலர்ந்தே இருக்கின்றது. இத்துணைச் சுவைகளைக் கொண்டிருக்கும் இலக்கியத்திலிருந்துதான் இலக்கணம் தோன்றியது. இலக்கியம் பலவாய்ப் பல்கிப் பெருகி வளரத் தொடங்கிய காலத்தில் மொழியை ஒழுங்குபடுத்தும் ஒரு கருவியாக நம் முன்னோர்கள் நமக்கு வகுத்துக்கொடுத்த ஒழுங்குமுறைதான் இலக்கணம் (இளவரசு,1998).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியத்தில் இருக்கும் கவிதைக்கு அழகு சேர்க்கும் வகையில் இலக்கணத்தின் ஒரு பிரிவான அணியிலக்கணம் திகழ்கின்றது. இத்தகைய சிறப்புகள் கொண்டிருக்கும் அணியிலக்கணம் கற்பித்தலின் முதன்மை நோக்கமே மாணவர்கள் அணியிலக்கணத்தின் சுவையை உணர்ந்து கவிதைகளைக் கற்றுக் கொண்டு இன்பத்தில் மூழ்கடிப்பதாகும். (பிரபாகரன்,2012).

தமிழ்மொழிப் பாடம் இடைநிலைப்பள்ளிகளில் ஒரு தேர்வுப் பாடமாகக் கற்பிக்கப்படுக்கின்றது. தமிழ்மொழிப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் மாணவர்களுக்குத் தமிழிலக்கியப் பாடத்தைப் படிவம் நான்கில் கூடுதலாக எடுக்கும் வாய்ப்பு இருக்கின்றது. கே.எஸ்.எஸ்.எம் எனும் இடைநிலைப்பள்ளிக்கான 2017-ஆம் ஆண்டு கல்வியமைச்சு அறிமுகப்படுத்திய தர அடிப்படையிலான தமிழிலக்கியக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கத்தரம் 1.4 கவிதையிலுள்ள நயத்தை விளக்குவர் என்பதின் கீழ் கற்றல் தரம் 1.4.2 கவிதையிலுள்ள அணி நயத்தை ஆராய்ந்து விளக்குவர் என்பது இடம்பெற்றுள்ளது. ஆசிரியர்கள் விளைபயன்மிக்க அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இக்கற்றல் தரத்தைச் சிறப்பாகக் கையாண்டால் இக்கற்றல் தரத்தைச் சிறப்பாக மாணவர்களிடம் கொண்டு சேர்க்க இயலும். அவ்வகையில் இவ்வாய்வு தமிழ்திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்த முன்னோடியாக அமையும் என்பதில் எந்தவோர் ஐயமில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

நம் தாய்மொழியான தமிழ்மொழி உலகில் இருக்கும் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். அரசர்கள் பலர் பெரும் புலவர்களின் துணைக்கொண்டு தமிழ்மொழியைச் செம்மைப்படுத்தயுள்ளனர் என்பதை வரலாற்றுப் பதிவுகள் குறிக்கின்றது. தமிழ்மொழிக்குச் சுவையூட்டும் வகையில் தமிழிலக்கியம் அமைந்துள்ளது. தமிழிலக்கியம் பண்பட்டது; அதே நேரத்தில் வரலாற்றுச் சிறப்புகளையும் கொண்டதாகவும் விளங்குகின்றன (சி.பாலசுப்ரமணியம், 1998).

தொடர்ந்து, தமிழிலக்கியம் முதற்சங்கம் தொடங்கி கடைச்சங்கம் வரை அரசர்கள், புலவர்கள் எனப் பலரால் வளர்த்தெடுக்கபட்டுப் பல இலக்கியப் படைப்புகளின் ஆக்கத்திற்கு வழிவகுத்துள்ளனர் (சி.பாலசுப்ரமணியம்,1998). அவற்றில் ஒன்றுதான் கவிதை இலக்கியம். கவிதை இலக்கியம் இன்றளவிலும் காலத்திற்கேற்ற மறுமலர்ச்சி அடைந்து பீடு நடைப்போடுக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியத்தில் இருந்துதான் இலக்கணம் தோன்றியது என பல தரவுகள் நமக்குக் காட்டுகின்றன. இலக்கியம் பலவாய்ப் பெருகி வளரத் தலைப்படும் காலத்தில் மொழியை ஒழுங்குபடுத்த நம்முடைய முன்னோர்கள் கண்டுபிடித்த ஒழுங்குமுறையே இலக்கணம் (இளவரசு,1998).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்திற்கென்று வகுத்துக் கொடுத்த நூல்தான் தொல்காப்பியம். 'தொன்மையைக் காக்கும் இயல்புடையது' என்பது தொல்காப்பியத்தின் பொருளாகும். பிற்காலத்தில் பலர் தொல்காப்பியத்திற்குப் கடந்து பல பிற இலக்கண நூல்களை எழுதியிருந்தாலும் அவை அனைத்தும் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கப்பட்டன என்று பல சான்றுகள் குறிக்கின்றன (முகம்மது, 2015).

தொடர்ந்து, அணியிலக்கணம் என்பது ஒரு மொழியிலுள்ள அழகை விளக்கும் இலக்கணமாகும். அணியிலக்கணம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானதே ஆகும். தொல்காப்பியர், தொல்காப்பியத்தில் உவமயியல் அணியையொட்டி நூற்பா எழுதுயுள்ளார். இதன்வழி, அணியிலக்கணத்தின் தொன்மையை அறிந்துகொள்ள முடிக்கின்றது. மனத்தில் தோன்றும் கருத்துகளைக் கற்பனைத் திறனாலும் பிட்டறிவின் முயற்சியாலும் புலமையுடன் அழகுற வெளிப்படுத்த அணியிலக்கணம் துணைப்புரிக்கின்றது. தொல்காப்பியத்தின்வழி அறியப்படும் அணியிலக்கணம் காலப்போக்கில் வளர்ச்சி அடைந்து பல அணியிலக்கண வகைகளாக உருவாகியுள்ளன. இவ்வாறு உருவாகியவை அனைத்தும் தொல்காப்பியம் சார்ந்து அமைந்துள்ளன. இதைத் தொடர்ந்து, கி.பி பதினொன்றாம் நூற்றாண்டில் அணியிலக்கணத்தை மையப்படுத்தி வீரசோழியம் என்ற இலக்கண நூலில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அணியிலக்கணத்திற்கேன்று தனிப்பிரிவு அமைகிகபட்டுள்ளது. இதைக்கடந்து, தண்டியலங்காரம் நூல் கி.பி பதினொன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. இதில் மொத்தம் 35 பொருளணிகள் இருக்கின்றன. கி.பி. பத்தொம்பதாம் நூற்றாண்டில் தோன்றிய முத்துவீரியம், சுவாமிநாதம், அருவகை இலக்கணம் ஆகிய நூல்களும் அணியிலக்கணம் பற்றி விளக்குகின்றன.

இவ்வாறு, கவிதைகளில் காணப்படும் அணியிலக்கணம் மலேசியக் கல்வி அமைச்சு வடிவமைத்த தமிழிலக்கியப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருக்கும் முதல் பிரிவான கவிதை பிரிவில் ஒரு கற்றல் தரமாக விளங்குகின்றது. மாணவர்கள் அணியிலக்கணத்தின் பயனை உணர்ந்து கவிதையின் சுவையையும் உட்பொருளையும் எளிமையாக உய்த்துணர்ந்தும் அதன் வழி உணர்த்தவரும் வாழ்வியல் கூறுகள், படிப்பினைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளவும் வழிவகுக்கின்றது. மாணவர்கள் இலக்கியக் பாடத்திட்டத்தில் கவிதைப் பிரிவில் உள்ளடக்கத் தரம் 1.4 கவிதையிலுள்ள நயத்தை விளக்குவர் என்பதன் கீழ் கற்றல் தரம் 1.4.2 கவிதையிலுள்ள அணி நயத்தை ஆராய்ந்து விளக்குவர் என்பதைக் கற்றுக்கொள்வர். இந்த ஆய்வில் எஸ்.பி.எம் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களின் தமிழிலக்கியப் பாடத்திட்டத்தில் அமைதுள்ள கவிதைகளில் இடம்பெற்றுள்ள அணியிலக்கணத்தைக் கண்டறிவதில் சிக்கல்களை எதிர்நோக்குக்கின்றனர் என்பதை ஆய்வாளரால் அறிய முடிந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாணவர்கள் கவிதையில் காணப்படும் அணியிலக்கண வகைகளை அடையாளம் காண்பது கடினமாக இருக்கின்றது என்ற காரணத்தைதான் பெரும்பாலோர் முன்வைக்கின்றனர்.

தொடர்ந்து, இன்றைய 21-ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தல் சூழலில் புதிய அணுகுமுறைகளின் துணையுடன் மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் விளைபயன்மிக்கதாக இருக்கின்றது என்று பல சான்றுகள் உணர்த்துக்கின்றன. விளைபயன்மிக்க அணுகுமுறைகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டினையையும் அதிகரிக்கின்றன (பெலிசியா,2019). மாணவர்கள் பாடல்கள்வழி அணியிலக்கணத்தை வகுப்பில் கற்றுக்கொள்ளும் பொழுது அவர்களால் அதனை முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்து கற்றுக்கொள்ள முடிக்கின்றது. திரைப்படப் பாடல்கள் துணையுடன் நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களுக்கு ஊக்கமாக அமைந்து அன்றைய பாடத்தைத் தொடர்ந்து வகுப்பில் படிக்க ஊன்றுக் கோலாக அமைக்கின்றது (சனிக்&பேசிக், 2016). அதுமட்டுமின்றி, கவிதைகளில் காணப்படும் அணியிலக்கண வகைகள் மாணவர்களுக்கு எளிமையாகக் கற்பிப்பதற்குத் திரைப்படப் பாடல்கள் பெரும் பங்கு வகிக்கின்றது என்று (பிரேமநந்தினி & மோகனதாஸ், 2018) கூறியுள்ளனர். ஆய்வாளர்கள் பலரும் கவிதையில் காணப்படும் அணியிலக்கணத்தை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் பாடல்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிறந்த அணுகுமுறையாக அமைந்திருப்பதால் தொடர்ந்து பல ஆய்வுகள் இதையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பல ஆய்வுகளில் எடுத்துரைத்துள்ளனர். அவர்களின் ஏடலின்படி ஆய்வாளர் தன்னுடைய ஆய்வைத் திரைப்படப் பாடல்களைக் கொண்டு கையாளலாம் எனத் திட்டமிட்டார். தமிழிலக்கியப் பாடத்தைப் கற்கும் மாணவர்களிடையே அணியிலக்கணம் வகைகளான உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனைச் கடினமின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்திரைப்படப் பாடல்கள் துணைப்புரியும் என்பதில் எந்தவோர் ஐயமுமில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

2020-ஆம் ஆண்டு, தமிழிலக்கியப் பாடத்திட்டத்திற்காக வரையறுக்கபட்ட கவிதைப் பொழில் எனும் கவிதைத் தொகுப்பில் மொத்தம் பன்னிரண்டு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கவிதைத் தொகுப்பில் இருக்கும் கவிதைகளையொட்டியே தேர்வில் முதல் பிரிவில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. முதல் பிரிவு, கவிதை சார்ந்த கேள்வி என்பதால் இந்தப் பகுதியில் அணியிலக்கணக் கேள்விகள் தேர்வில் கேட்கப்படுகின்றன. மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கண்டறிவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதால் இப்பிரிவைச் சிறப்பாகச் செய்ய முடியவில்லை. அதிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாணவர்கள் மரபுக் கவிதைகளில் காணப்படும் அணியிலக்கண வகைகளைக் கண்டறிவதில் கடினப்படுகின்றனர் (சரசுவதி & பொன்னி, 2018).

மாணவர்கள் கவிதையில் இடம்பெற்றிருக்கும் அணியிலக்கண வகைகளை எளிமையாக அடையாளம் காண பல வழிமுறைகள் இருக்கின்றன. அணியிலக்கணத்தின் சுவையை உய்த்துணரத் தொடங்கிவிட்டால் அணியிலக்கண வகைகளைக் கவிதைகளில் அடையாளம் காண கற்றுக்கொள்வர். இருப்பினும், மாணவர்களை ஈர்க்கும் வகையான அணுகுமுறைகளின் பயன்பாடு இல்லாததால் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது (பிரேமநந்தினி & மோகனதாஸ், 2018). ஆர்வம்தான் ஒரு மாணவன் மனம் தளராமல் ஒன்றைத் தொடர்ந்து கற்றுக்கொள்வதற்கு அடித்தளமாக இருக்கும். இருப்பினும், அந்த ஆர்வமே குன்றியிருப்பதால் மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் நாட்டமின்றி இருக்கின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைத் தொடர்ந்து, ஆசிரியர்கள் பள்ளிகளில் நேரம் பற்றாக்குறையினைக் கருதி மிக எளிமையான அணுகுமுறைகளான வரைப்படம் போன்றவற்றைத் துணையாகக் கொண்டு கவிதைகளில் காணப்படும் அணியிலக்கண வகைகளைக் கற்றுக் கொடுக்கின்றனர். இவ்வாறான வழிமுறைகள் மாணவர்களிடையே சலிப்புத் தன்மையை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உண்டாக்குக்கின்றது. இன்றைய மாணவர்கள் அதிவேகச் சிந்தனைத்திறன் கொண்டிருப்பதால் அவர்களின் சீரிய சிந்தனைக்குத் தீனி போடும் வகையில் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பள்ளிகளில் பயன்படுத்தி அணியிலக்கணத் திறனை மாணவர்களிடம் மேம்படுத்தும் கடமை ஆசிரியர்களுக்கு இருக்கின்றது (மனோன்மணி,2017).

மேலும், 21-ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் சூழலில் பலவகையான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி நடத்தும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்தான் மாணவர்களைக் கவரும்வண்ணம் அமைந்திருக்கின்றது (டோபி எமெர்ட்,2015). மாணவர்கள் அணியிலக்கண வகைகளைத் திரைப்படப் பாடல்கள் மூலம் கற்றுக்கொள்ளும் போது எளிமையாக அணியிலக்கண வகைகளைப் அடையாளம் காண முடிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மாணவர்கள் பெரும்பாலும் வகுப்பறையில் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு நீண்ட நேரம் ஆசிரியர் கற்றுக் கொடுப்பதைச் செவிமடுப்பதைக் கடினமாகக் கருதுக்கின்றனர். புதுமைகள், கவரும் வகையில் இருக்கும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பிக்கும்போது, மாணவர்கள் உற்சாகத்துடன் வகுப்பில் செயல்பட முடிக்கின்றது (நவநீதன், 2017). இதனால், ஓர் ஆசிரியரால் மாணவர்களுக்கு அன்றைய கற்றல் தரத்தைச் சிறப்புடன் கற்பிக்க இயலுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இம்மாதிரியான சிக்கல்கள் மாணவர்களுக்கு அணியிலக்கணத் திறனைக் கற்றுக்கொள்வதற்கு முட்டுக் கட்டையாக இருப்பதால் அதற்கான தீர்வை வழங்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உள்ளது. இச்சிக்கல்கள் வழி மாணவர்களுக்குச் சிறந்த அணுகுமுறைகளைக் கொண்டு வகுப்புகள் நடத்தினால் அவர்களின் ஈடுப்பாட்டினை மிகைப்படுத்த இயலும் என்பதை அறிய முடிக்கின்றது. மாணவர்களுக்கு அணியிலக்கணத்தை விளைபயன்மிக்க அணுகுமுறைகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகள் குறைவாகவே இருக்கின்றது. அதுமட்டுமின்றி, மேலே குறிப்பிடப்பட்ட சில ஆய்வுகளில் சிக்கல்களை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கேற்ற தீர்வுகள் விரிவாக விளக்கப்படவில்லை. எனவே, ஆய்வாளர் மாணவர்களுக்குத் திரைப்படப் பாடல்களை ஓர் அணுகுமுறையாகப் பயன்படுத்தி ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ் இலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு வகை அணிகளைக் கற்றுக் கொடுத்தால் அவர்களால் அத்திறனைச் கடினமின்றி அடைய முடியும் என்று (பாமா பெரியசாமி,2018), (பிரேமநந்தினி & மோகனதாஸ், 2018) ஆகிய ஆய்வாளர்களின் பரிந்துரைகளின்கேற்ப ஆய்வை மேற்கொண்டார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.4 ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்டது. அவை ,

1.4.1 ஐந்தாம் படிவ மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிதல்.

1.4.2 ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழிலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனைத் தமிழ்த்திரைப்படப் பாடல்கள் மூலம் மேம்படுத்துதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.5 ஆய்வு வினா**

1.5.1 ஐந்தாம் படிவ மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்கள் யாவை?

1.5.2 எவ்வாறு ஐந்தாம் படிவ மாணவர்களின் தமிழ் இலக்கியக் கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவக அணி, பின்வருநிலை அணி கற்றல் திறனை மேம்படுத்துதல் ?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.6 ஆய்வு நன்மைகள்

இவ்வாய்வு தமிழிலக்கியப் பாடம் கற்கும் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கும் தமிழிலக்கியப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

### 1.6.1 மாணவர்கள்

இவ்வாய்வு மேற்கொள்வதன் வழி ஐந்தாம் படிவ மாணவர்கள் உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய அணியிலக்கண வகைகளைக் கவிதைகளில் கண்டறிவதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களையும் அதற்கான தீர்வையும் அறிந்துகொள்ள இயலும். இவ்வாய்வில் வழங்கப்படும் அணுகுமுறையைக் கொண்டு மாணவர்களால் கவிதைகளில் இருக்கும் உருவக அணியையும், பின்வருநிலை அணியையும் எளிமையாக கண்டறிந்து தேர்வில் சிறப்பாகப் பதிலளிக்க முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.6.2 ஆசிரியர்கள்

இவ்வாய்வு மேற்கொள்வதன் மூலம் பள்ளிகளில் தமிழிலக்கியப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களால் கவிதைகளில் காணப்படும் உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு அணி வகைகளைக் கண்டறிவதில் மாணவர்களிடையே ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அறிந்துகொள்ள இயலும். தொடர்ந்து, ஆசிரியர்களுக்கு இந்த ஆய்வில் பரிந்துரைக்கப்பட்ட அணுகுமுறை பயனுள்ளதாகவும் இனி வரும் காலங்களில் வழிக்காட்டியாகவும் இருக்கும். ஆசிரியர்கள் பல அணுகுமுறைகளைக் பயன்படுத்தி, எளிமையான முறையில் தமிழிலக்கியத் தொகுப்பின் கவிதைகளில் இடம்பெற்றிருக்கும் உருவக அணியையும் பின்வருநிலை அணியையும் கற்றுக் கொடுக்க இந்த ஆய்வுத் தூண்டுதலாக அமையும்.

**1.7 ஆய்வு எல்லை**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்வு தமிழிலக்கியப் பாடம் கற்கும் ஐந்தாம் படிவ மாணவர்களை மட்டும் உட்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்கு 10 ஐந்தாம் படிவ மாணவர்கள் ஆய்வு மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடர்ந்து, ஆய்வாளர் இந்த ஆய்வைக் கோலாலம்பூர், புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் அமைந்திருக்கும் ஓர் இடைநிலைப்பள்ளியைத் ஆய்வுத் தளமாகத் தேர்ந்தெடுத்து மேற்கொண்டார்.

அணியிலக்கண வகைகளான உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு வகை அணிகளைக் கொண்டு இவ்வாய்வு நடத்தப்பட்டன. இவ்வாய்வு, மாணவர்கள் இவ்விரண்டு வகை அணிகளைக் கண்டறியும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திறனில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிந்து, அதற்கான தீர்வாகத் தமிழ்த்திரைப்படப் பாடல்களை ஓர் அணுகுமுறையாகப் பயன்படுத்துவது என இரண்டு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வைச் சிறப்பாக மேற்கொள்ள ஆய்வாளர் தமிழ்த் திரைப்படப் பாடல்களை ஓர் அணுகுமுறையாகப் பயன்படுத்தியுள்ளார்.

மேலும், ஐந்தாம் படிவ மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் குன்றி இருக்கும் காரணங்களைக் கண்டறிய ஆய்வாளர் கருத்தறிவினாப் படிவத்தைப் பயன்படுத்தினார். தொடர்ந்து, ஆய்வாளர் இந்த ஆய்வைச் சிறப்பாக மேற்கொள்ள முன்னறித் தேர்வு,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பின்னறித் தேர்வு, நேர்க்காணல் வினாதத்தொகுதி, உற்றுநோக்கல் படிவம், மதிப்பீட்டுத் தாள் ஆகியவற்றை ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தினார்.

எனவே, இவ்வாய்வு மேற்கண்ட எல்லைக் கூறுகளின் அடிப்படையில் முறையாகச் செயல்படுத்தப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



### 1.8 ஆய்வுச் சான்றாதரம்

#### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

இந்த ஆய்வுக்குத் தமிழ்த்திரைப்படப் பாடல்கள் , தமிழிலக்கியப் பாடத்தின் கற்றல் தரம் ஆகிய இரண்டும் முதன்மைச் சான்றாதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. கோலாலம்பூர், புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் அமைந்திருக்கும் ஓர் இடைநிலைப்பள்ளியில் தமிழிலக்கியப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுத்துப் கற்கும் ஐந்தாம் படிவ மாணவர்களும் தமிழிலக்கிய ஆசிரியர்களும் உட்படுத்தப்பட்டனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

#### 1.8.2 துணைச் சான்றாதாரம்

இவ்வாய்வுக்கு ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் ஆகியவை ஆய்வுத் துணைச் சான்றாதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுமட்டுமின்றி, ஆய்வாளரின் ஆய்வுக்கு இணையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளும் துணைச் சான்றாதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

### 1.9.1 இலக்கியம்

இலக்கியம் என்பது மக்களின் பல்வேறு உணர்வுகளும் அவர்களின் செயல்களும் ஒன்று சேர்ந்து உதித்த எழுத்துப் பதிப்பாகும். தொடர்ந்து, இலக்கியம் என்பது மரபுகளை உள்ளடக்கி நிலைத்திருக்கும் ஒரு கலையாகும் (மாண்புமிகு திரு க. பாண்டியராஜன்). இலக்கியம் மக்கள் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி எனவும் கூறப்படுகின்றது.

### 1.9.2 அணியிலக்கணம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கண வகைகளில் ஒன்று அணியிலக்கணம் (புலவர் குழந்தை,1948). அணி என்பது பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தப்படும் உத்தி என்பர் (Hornby,1995). அணி இலக்கணம் கவிதைகளில் கவிஞர்கள் கூற வரும் கருத்துகளை நயத்துடன் எடுத்துரைக்க அணியிலக்கணப் பயன்பாடு தேவைப்படுகின்றது. மனத்தில் தோன்றும் கருத்துகளைக் கற்பனைத் திறனாலும் பட்டறிவின் முயற்சியாலும் புலமையுடன் அழகுற வெளிப்படுத்த அணியிலக்கணம் துணைப்புரிக்கின்றது (Lanham, 1991).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.3 சிக்கல்

சிக்கல் என்பது உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய அணிகளைக் கவிதைகளில் கண்டறிவது என்று ( சரசுவதி & பொன்னி,2018) கூறுகின்றனர். மாணவர்கள் உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு வகை அணிகளைக் கண்டறிவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் (பிரேமநந்தினி & மோகனதாஸ், 2018). எனவே, ஆய்வாளர் இவ்வாய்வில் ஐந்தாம் படிவ மாணவர்கள் உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு வகை அணிகளைக் கண்டறிவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4 காரணம்

காரணம் என்பது ஒரு சிக்கல் ஏற்படுவதன் நோக்கத்தைக் கண்டறிவதைக் குறிக்கின்றது. மாணவர்கள் அணியிலக்கணத்தைக் கண்டறிவதில் ஆர்வம் குன்றி இருப்பதுதான் அணியிலக்கணத் திறன் மாணவர்களிடம் மேம்படாமல் இருப்பதற்கு அடிப்படையாக இருக்கின்றது (சுப்பிரமணியம்,2021).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.5 மேம்படுத்தல்

மேம்படுத்துதல் என்ற சொல், இருக்கும் நிலையைவிட சிறப்பான நிலையை அடையச் செய்தலைக் குறிக்கின்றது. மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் ஆசிரியர்கள் அணியிலக்கணத்தைக் கற்றுக் கொடுத்தால், அவர்களின் திறனை மேம்படுத்த இயலும் ( சரசுவதி & பொன்னி,2018).

### 1.9.6 தீர்வு

தீர்வு என்பது சிக்கலைக் களைய உதவும் ஒரு கருவியாகும். எல்லாச் சிக்கல்களுக்கும் ஒரு தீர்வு கண்டிப்பாக இருக்கும் என நம் வீட்டில் இருக்கும் பெரியவர்கள் கூறி பலமுறைக் கேட்டிருப்போம். அணியிலக்கணத்தைக் கண்டறியவதற்கு சரசுவதி & பொன்னி (2018) ஆகிய இருவரும் மேற்கொண்ட ஆய்வில் 'Kahoot ' எனும் விளையாட்டை ஒரு தீர்வாகப் பயன்படுத்தி உள்ளனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இவ்வாய்வு தொடர்பான செய்திகளை மேலோட்டமாக இவ்வியலில் கண்டறிந்தோம். இவ்வாய்வின் பின்னணியில் அணியிலக்கணத்தைப் பற்றிய குறிப்பிடப்பட்டன. பிறகு, தமிழிலக்கியப் பாடத்திட்டத்தைப் பற்றியும், 21-ஆம் நூற்றாண்டுக் கல்வித் திட்டத்தில் அணுகுமுறைகளின் பயன்பாடுகளும், மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்பவை எல்லாம் விளக்கப்பட்டன. உருவக அணி, பின்வருநிலை அணி ஆகிய இரண்டு வகை அணிகளை மாணவர்கள் கண்டறிவதில் சிக்கல்கள் எதிர்நோக்குகின்றார்கள் எனவும் அதனைக் களையத் தமிழ்த்திரைப்படப் பாடல்களை ஆய்வாளர் ஓர் அணுகுமுறையாகத் தேர்ந்தெடுத்ததையும் குறிப்பிட்டுள்ளார். ஐந்தாம் படிவ மாணவர்கள் உருவக அணி, பின்வருநிலை அணிய ஆகிய இரண்டு வகை அணிகளைக் கண்டறிவதில் ஆர்வம் குன்றி இருக்கின்றனர் என்று ஆய்வாளர் கண்டறிந்தார். அச்சிக்கலைக் களையும் பொருட்டு இரண்டு நோக்கங்களைக் கட்டமைத்துள்ளார். இந்த ஆய்வால் மாணவர்களும் ஆசிரியர்களும் பயன் பெறுவர்.மேலும், இவ்வியலில் எல்லைக்கூறுகள் சீராக விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக, இயல் ஒன்று, ஆய்வின் கலைச்சொற்களின் விளக்கங்களுடனும் அறிஞர்களின் கருத்துகளுடனும் சுருக்கமாகக் கூறிய வண்ணம் முற்றுப்பெறுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi